புதுச்சேரி அரசு
வேளாண் மற்றும் விவசாயிகள் நலத்துறை
கூடுதல் வேளாண் இயக்குநர் (பயிற்சி வழி தொடர்பு திட்டம்)அலுவலகம்
தட்டாஞ்சாவடி, புதுச்சேரி.

----

## செய்திக்குறிப்பு

புதுச்சேரி அரசு, வேளாண் மற்றும் விவசாயிகள் நலத்துறையின் கீழ் தட்டாஞ்சாவடியில் இயங்கும் கூடுதல் வேளாண் இயக்குநர் (பயிற்சி வழித் தொடர்பு திட்டம்) அலுவலகம் மூலமாக வேலையில்லா விவசாய பட்டதாரிகள் மற்றும் விவசாய சான்றிதழ் பயிற்சி முடித்தவர்கள், வேளாண் சுயதொழில் மற்றும் வேளாண் தொழில்நுட்ப ஆலோசனை நிலையம் துவங்குவதை ஊக்குவிக்கும் வகையில் மானியமாக வேளாண் பட்டதாரிகளுக்கு ரூ.3.00 இலட்சமும், சான்றிதழ் பயிற்சி முடித்தவர்களுக்கு ரூ.75,000-மும் வழங்கும் திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தில் பயனடைய விரும்பும் ஆர்வமுள்ள தகுதியான விண்ணப்பதாரர்கள் விண்ணப்பங்களை தட்டாஞ்சாவடி கூடுதல் வேளாண் இயக்குநர் பயிற்சி வழித் தொடர்பு திட்ட அலுவலகத்தை அணுகி பெற்றுக் கொள்ளலாம் அல்லது இணையதள பதிவிறக்கம் (**www.agri.py.gov.in**) மூலம் விண்ணப்பங்களை பெற்று பூர்த்தி செய்து, விரிவான திட்ட அறிக்கைகளுடன் வரும் அக்டோபர் 31ஆம் தேதிக்குள் சமர்ப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

எனவே, தகுதி வாய்ந்த விவசாய பட்டதாரிகள் மற்றும் விவசாய சான்றிதழ் பயிற்சி முடித்தவர்கள் இந்த வாய்ப்பினை பயன்படுத்தி வேளாண் சுய தொழில் தொடங்கிட கேட்டுக் கொள்ளப்படுகிறது.

22/9/22

கூடுதல் வேளாண் இயக்குநர் (ப.வ.தொ.தி)
தட்டாஞ்சாவடி, புதுச்சேரி.